செ.வெ.எண்.202 நாள்.24.03.2018.

**திருநெல்வேலி சந்திப்பு பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசின் சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சியினை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் திறந்து வைத்து, பார்வையிட்டார்.**

------

திருநெல்வேலி சந்திப்பு பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசின் சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் இன்று (24.03.2018) திறந்து வைத்தார். மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் தமிழ்நாடு அரசின் ஓராண்டு சாதனை விளக்கும் வகையில் ‘‘அம்மா வழியில் நல்லாட்சி அதற்கு ஓராண்டு சாதனையே சாட்சி’’ என்ற கையேட்டினை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைமச்சர் அவர்கள் வெளியிட்டார்.

புகைப்படக் கண்காட்சியில், தமிழ்நாடு அரசு ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்கு எண்ணற்ற நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவது தொடர்பான புகைப்படங்கள், விலையில்லா அரிசி வழங்கும் திட்டம், ஏழை, எளிய பெண்களின் திருமணத்திற்கு திருமாங்கல்யத்திற்கான தங்கம் 8 கிராம் மற்றும் திருமண உதவித் தொகை வழங்கும் திட்டம், அம்மா இரு சக்கர வாகனம் வழங்கும் திட்டம், விலையில்லா வீட்டுமனை பட்டா வழங்கும் திட்டம், முதியோர் உதவித் தொகை வழங்கும் திட்டம், பசுமை வீடுகள் வழங்கும் திட்டம், ஏரி, குளங்கள் குடிமராமத்து பணிகள் திட்டம், மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்டம், கர்ப்பிணி பெண்களுக்கான நலத்திட்டம், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா இரு சக்கர மிதி வண்டி மற்றும் லேப்டாப் வழங்கும் திட்டம் மேலும், மாவட்டத்தில் நடைபெற்றுள்ள வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த புகைப்படங்கள் இடம் பெற்றிருந்தன. பொதுமக்கள் அதிகளவில் புகைப்படக் கண்காட்சியினை பார்வையிட்டனர்.

இந்நிகழ்ச்சியில், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.ஆர்.பி.பிரபாகரன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி.மைதிலி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.இரா.ஜெயஅருள்பதி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செ) திரு.வெ.சீனிவாசன், டான்பெட் துணைத் தலைவர் திரு.கண்ணன் (எ) ராஜு, ஆவின் சேர்மன் திரு.ரமேஷ், நெசவாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.ஆறுமுகம், நெல்லை பேரங்காடித் தலைவர் திரு.பல்லிக்கோட்டை செல்லத்துரை, மாநகராட்சி நகர்நல அலுவலர் மரு.பொற்செல்வன், மாநகராட்சி தச்சை மண்டல உதவி ஆணையர் திருமதி.சுப்புலெட்சுமி, மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் திருமதி.சாந்தி, முக்கிய பிரமுகர்கள் திரு.சுதா பரமசிவம், திரு.பால்மனோஜ்பாண்டியன், திரு.பரணி சங்கரலிங்கம், திரு.தச்சை கணேசராஜா, திரு.விஜயகுமார், திரு.நடராஜன், திரு.ஏ.கே.சீனிவாசன், திருநெல்வேலி வட்டாட்சியர் திரு.கணேசன், மாநகராட்சி சுகாதார அலுவலர் திரு.அரசகுமார், சுகாதார ஆய்வாளர் திரு.முருகன் மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.